(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 101.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011, யூலை 05, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0285/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றையும்,

(ii) மேற்படி அமைச்சின் தற்போதைய மொத்தச் செலவினத்தை மாத மற்றும் வருட வாரியாகவும்,

(iii) நிரந்தர பணியாள் தொகுதியின் எண்ணிக்கையையும் அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த மொத்த ஊதியங்களையும்,

(iv) நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அவர்களின் பணியாள் தொகுதியினர் ஆகியோருக்கான மாதாந்த மொத்தச் செலவினத்தையும்

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கு வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0717/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 1994 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள தீர்வை வரியற்ற வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவ்வாறான ஒவ்வொரு தீர்வை வரியற்ற வர்த்தக நிலையமும் வழங்கப்பட்டுள்ள அல்லது குத்தகைக்கு விடப்பட்டுள்ள நபர்களின் பெயர், முகவரிகள் தனித்தனியே யாவையென்பதையும்,

(iii) அவ்வாறான கடைத்தொகுதிகள் வழங்கப்பட்டுள்ள மொத்த நிதித் தொகை அல்லது நிரந்தரமாக ஒப்படைப்பதற்கு அரசாங்கம் பெற்றுக்கொண்ட நிதித் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய கடைத்தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனின், அதனை ஆரம்பிக்கும் திகதி யாதென்பதையும்,

(iii) அதன் கீழ் நிர்மாணிக்க எதிர்பார்க்கும் வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1047/ '10

3\.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றுகின்ற தொண்டர் ஆசிரியர்களை ஆசிரிய உதவியாளர்களாக நியமிப்பது தொடர்பாக 2006.10.25 ஆம் திகதி அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றுக்கமையவும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47உப ஆம் இலக்க, 2007/02/10 ஆம் திகதிய அறிவுறுத்தல்களுக்கமையவும், மத்திய மாகாண கல்வி அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதற்கமைய மத்திய மாகாணத்தில் ஆசிரிய உதவியாளர் பதவிக்காக விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) நேர்முகப் பரீட்சையில் மேற்படி பதவிக்கு தகைமை பெற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) இவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவை என்பதையும்;

(iv) இவர்களில் ஏற்கெனவே மேற்படி நியமனங்களைப் பெற்ற ஆட்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்களும் முகவரிகளும் கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்குரிய கல்வி வலய மட்டத்தில் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1144/ '11

4\.

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்ற இலங்கையர்களில்,

(i) காயமடைந்தவர்களின் (பல்வேறு விபத்துக்களுக்கு உள்ளாகிய) எண்ணிக்கை;

(ii) தொழில்களை இழந்து நாடு திரும்பியர்களின் எண்ணிக்கை;

(iii) நலன்புரி நிலையங்களில் தங்கி உள்ளவர்களின் எண்ணிக்கை;

(iv) 2005 ஆம் ஆண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை

வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பாதிக்கப்பட்டவர்களுக்காக அரசாங்கம் ஏதேனுமொரு நிவாரண வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியதா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களுக்காக வழங்கப்பட்ட நிவாரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1163/ '11

5.

கௌரவ அநுர திசாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் புகையிரத திணைக்களத்தினால் தீயணைக்கும் கருவிகள் ஏதேனும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், கொள்வனவு செய்யப்பட்ட தீயணைக்கும் கருவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இதற்கு செலவாகிய பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) புகையிரதப் பெட்டிகளில் பொருத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட தீயணைக்கும் கருவிகள் காலாவதியாகியவைகள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கு பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1177/ '11

6.

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 டிசம்பர் 10 ஆம் திகதி ஐ.நா. வதிவிட இணைப்பாளர் அலுவலகத்தின் அனுசரணையுடன் சட்ட பீடம் மற்றும் மனித உரிமைகள் ஆய்வுக்கான நிலையம் ஆகியவற்றினால் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஒரு நிகழ்வில் 1998 இல் ஐ.நா. மனித உரிமைகள் பரிசு பெற்ற சுனிலா அபேசேகர உரையாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) சுனிலா அபேசேகர உரையாற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் ஐ.நா. அந்நிகழ்வை இரத்துச் செய்தது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே சொல்லப்பட்ட நிகழ்வில் சுனிலா அபேசேகர உரையாற்றுவதற்கு அனுமதிக்கப்படாதது ஏன் என்பதையும்;

(ii) பல்கலைக்கழகம் ஒன்றில் யார் உரையாற்ற முடியும் என்பதை நிர்ணயிப்பதற்கான கொள்கை ஒன்று உள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறெனின் அக்கொள்கை யாது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) சிந்தனைச் சுதந்திரத்தையும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் வேண்டிநிற்கும் சர்வதேசக் கற்கையும் அறிவும் எவ்வாறு பல்கலைக்கழகங்களில் மேம்படுத்தப்படுகின்றது என்பதை அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0656/ '10

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டிலுள்ள பாரிய அரசாங்கத் திணைக்களங்கள் பத்தினையும்,

(ii) அவை எவ்வாறு பாரிய பத்துத் திணைக்களங்களாக் கருதப்படுகின்றன என்பதையும்,

(iii) ஒவ்வொரு திணைக்களத்திலும் இடப்பட்டுள்ள மூலதனத்தினையும் அவற்றுள் தற்போதுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையினையும்,

(iv) இற்றைவரையான கடந்த ஐந்து வருடங்களில் ஒவ்வொரு திணைக்களத்தினதும் இலாபம் அல்லது நட்டத்தினை வருடாந்த அடிப்படையிலும்,

(v) ஒவ்வொரு திணைக்களத்தினதும் சந்தைப் பங்கினையும்

அவர் அறியத் தருவாரா?

(ஆ) மேலேயுள்ள திணைக்களங்களில் நட்டத்தில் இயங்குகின்ற திணைக்களங்களை இலாபமீட்டும் திணைக்களங்களாக மாற்றமுடியுமா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0732/ '10

8.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு முதல் இதுவரை வெளிநாடுகளில் மரணமடைந்த வெளிநாடு சென்ற ஊழியர்களின் எண்ணிக்கை மாதாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) அந்த மரணங்களுக்கான காரணங்கள் எவை என்பதையும்,

(iii) அவ்வாறு மரணித்தவர்களில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பிரேதங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) பிரேதங்களைக் கொண்டுவர முடியாத நிலையேற்பட்டிருப்பின் அதற்கான காரணங்கள் எவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி மரணித்தவர்களுக்காக இன்றுவரை இழப்பீடு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மரணித்தவர்களுக்காக இழப்பீடு வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் இருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1048/ '10

9.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய மாத்தளை மாவட்டத்தின் நாஉல, வில்கமுவ, கலேவெல, மாத்தளை ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 31 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்;

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1149/ '11

10.

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு முகவர் நிறுவனம் ஒன்றை பதிவு செய்வதற்காக அரசாங்கம் அறவிட்ட கட்டணத்தை வருடவாரியாக தனித்தனியே எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுகின்ற வெளிநாட்டு தொழில்வாய்ப்பு முகவர் நிறுவனங்கள் உள்ளனவா என்பதையும்,

(ii) அவை சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) அவ்வாறான நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1164/ ’11

11\.

கௌரவ அநுர திசாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வகுப்புத் தடைக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த மாணவர்களின்/மாணவிகளின் பெயர்கள் மற்றும் வகுப்புத் தடை செய்யப்பட்டமைக்கான குற்றச்சாட்டுக்கள் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) இவர்களில் முறையான விசாரணை நடத்தப்பட்டு இறுதி முடிவு வழங்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) வகுப்புத் தடைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள ஏனைய மாணவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0657/ ’10

12\.

கௌரவ ரவி கருணநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டின் 30 மிகப் பெரிய அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் எவை என்பதையும்;

(ii) அவை அரசுக்குச் சொந்தமான 30 மிகப் பெரிய தொழில்முயற்சிகளாக எவ்வாறு கருதப்படுகின்றன என்பதையும்;

(iii) ஒவ்வொன்றிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனம், மற்றும் தற்போதுள்ள பணியாட்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) ஒவ்வொரு நிறுவனத்தினதும் இற்றைவரையிலான கடந்த 5 வருடங்களுக்கான இலாப, நட்டத்தை வருடாந்த அடிப்படையிலும்;

(v) அரசுக்குச் சொந்தமான ஒவ்வொரு தொழில்முயற்சியினதும் சந்தைப் பங்கு எவ்வளவு என்தையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்சொன்ன தொழில்முயற்சிகளில், நட்டத்தில் இயங்கும் ஒவ்வொன்றையும் இலாபமீட்டும் தொழில் முயற்சிகளாக்க முடியுமா எனக் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0965/ ’10

13\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களில் சிறையிலிடப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்கள் சிறையிலிடப்படுவதற்கு காரணமாக அமைந்த தவறுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டில் விரிவுரைகளில் பங்கேற்பதற்கு தடைவிதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி விரிவுரைகளில் பங்கேற்பதற்கு தடைவித்தமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1049/ '10

14.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை, நுவரெலியா, ஹங்குரன்கெத்த, கொத்மலை மற்றும் ஹட்டன் ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 50 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்,

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1169/ '11

15.

கௌரவ அநுர திசாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தெஹிவளை மேம்பாலம் திறந்து வைக்கப்பட்ட திகதியையும் யாரால் திறந்து வைக்கப்பட்டதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தெஹிவளை மேம்பாலத்தை நிர்மாணித்ததன் மூலம் ஈடேற்றிக்கொள்ள எதிர்பார்த்த நோக்கங்கள் யாவையென்பதையும்;

(ii) தற்போது குறித்த பாலத்தில் கனரக வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தற்போது, மேற்படி மேம்பாலத்தினூடாக கனரக வாகனங்கள் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருப்பின், குறித்த பாலத்தை நிர்மாணித்ததன் மூலம் ஈடேற்ற எதிர்பார்த்திருந்த நோக்கங்கள் நிறைவேறவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால், மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2011 யூன் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011, பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதிய 1693/25 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011, ஏப்பிறல் மாதம் 08 ஆம் திகதிய 1700/22 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011, மே மாதம் 02 ஆம் திகதிய 1704/7 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கிழான இறக்குமதிகள் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்ப்படுமாக.

(2011 மே 16 ஆம் திகதிய 1706/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— அரசியலமைப்பின் 44(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 14 ஆம் பிரிவு மற்றும் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2011, மே மாதம் 16 ஆம் திகதிய 1706/1 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— குறைநிரப்பும் தொகை - தலைப்பு 103, நிகழ்ச்சித் திட்டம் 1,— †2011 சனவரி மாதம் 1 ஆம் திகதியுடன் ஆரம்பமாகி, 2011 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டின் சேவைக்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியித்தினால் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வேறு ஏதேனுமொரு நிதியத்தினால் அல்லது பணத்தினால் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கு உகந்ததைச் செய்யக் கூடியதானவொரு தொகையினால் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் பெற்றுக் கொள்ளும் ஏதேனுமொரு கடன் தொகையினால் ரூபா இருபது பில்லியனுக்கு (ருபா. 20,000,000,000) மேற்படாத குறை நிரப்புத் தொகையினைக் கொடுக்க வேண்டியதுடன் அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு | 103 | - | பாதுகாப்பு அமைச்சு |
| நிகழ்ச்சித் திட்டம் | 1 | - | தொழிற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் |
| கருத்திட்டம் | 2 | - | அமைச்சு நிருவாகமும் நிறுவன சேவைகளும் |

| | | |
|---|---|---|
| ஆக்கப் பொருட் செலவினம் | ரூ. | 20,000,000,000 |
| மொத்தச் செலவினம் | ரூ. | 20,000,000,000 |

(இருபது பில்லியன் ரூபா மட்டும்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2011, யூன் மாதம் 23ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

* 8.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 9.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 10.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 12.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 17.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 18.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 19.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 20.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

நீதி அமைச்சர்,— கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 6 ஆம், 10 ஆம் பிரிவுகளின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 சனவரி 21 ஆம் திகதிய 1689/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.06.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0199/ ’10

1\.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ரிதீமாலியத்த பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்த காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வன வாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0200/ ’10

2\.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வனவாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0201/ '10

3.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கந்தகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வன வாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0202/ '10

4.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மீகஹகிவுல பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக்கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியினளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வன வாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எத்தனை ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0203/ '10

5.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சொரணாதொட்ட பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக்கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியினளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வனவாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0204/ '10

6.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பதுளை பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வனவாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?